கூடிய விரைவில் இரண்டு டிராலர்களை வாங்கவும், தமிழ்நாட்டில் அதற்கு ஒப்புக்கொண்ட வகையில் இரண்டு டிராலர்கள் செய்யவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-30)

திருமதி த. ந. அனந்தநாயகி : மீன்பிடி படகுகள் கொடுக்கப் படுமா என்று கேட்டதற்கு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். சில படகுகள் மீன் பிடிப்பதற்குப் பயன்படவில்லை. இவைகளை வேண்டாமென்று சொல்லுகிறார்கள். முப்பத்து ஆறு அடிப் படகுகள் கடலில் போகவில்லை என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அதற்கு பதிலாக 32 அடிப் படகுகள் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: மீனளக் குழுவின் மூலம் 30 அடி, 32 அடி படகுகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

புன்னைக்காயலில் மீன்பிடி துறைமுகம்.

* 329 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புன்னைக்காயல் கிராமக் கடற்கரைப் பகுதியை மீன்பிடித் துறைமுகமாக மாற்றும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, புன்னைக் காயல் கடற்கரைப் பகுதியை மீன்பிடி துறைமுகமாக மாற்று வதற்கு எப்போதேனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா? மேற்படி இடத்தை மீன்பிடி துறைமுகமாக மாற்றுவதற்கு என்ன காரணத்தினால் அரசு மறுக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, புன்னைக் காயல் முகத்துவாரத்தில் ஒரு மீன்பிடி துறைமுகம் ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு சார்பில் பெங்களூரில் இருக்கிற ஆய்வு நிறுவனத்தால் ஆய்வு செய்யப்பட்டு அங்கு மீன்பிடி

1975 நவம்பர் 12]

துறைமுகம் அமைப்பதற்கு கூடுதலான பணம் ஆகும் என்றும், அதற்கு மிக அருகாமையில் தூத்துக்குடியில் ஒரு மீன்பிடி துறைமுகம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டதால் இந்த இடத்தில் மற்றொரு மீன்பிடி துறைமுகம் தேவையற்றது, வீண் செலவாகும் என்று இந்த முயற்சி கைவிடப்பட்டு விட்டது.

உடல் ஊனமுற்றோருக்குப் பயிற்சித் திட்டம்.

*330 வின—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றோர் புதுவாழ்வுத் திட்டத்தின்கீழ் பயிற்சித் திட்டம் ஏதேனும் கும்முடிப்பூண்டி வட்டாரத்திலும், எல்லாபுரம் வட்டாரத்திலும் அமைக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, முட்டுக்காடு போன்ற பகுதியில் தொழில்பேட்டை அமைந்து உள்ளது பெரும் பயன் தருவதாக உள்ளது. அந்த அளவிற்கு மிகப் பெரிய அளவில் இல்லாவிட்டாலும், சிறிய அளவில் இந்தப் பகுதியில் தொழிற் பயிற்சிக் கூடங்கள் அமைப்பதற்கு எதிர்காலத்தில் இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு ஆய்வு செய்யும்.

செவிடர்களுக்கான பள்ளி.

*331 வின—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தஞ்சை மருத்துவக் கல்லூரி அருகே நீலகிரி என்னும் இடத்தில் செவிடர் பள்ளி ஒன்று அமைத்திட அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (அ) & (இ) இல்லை.